ங்கள் : ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

22 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 18 ஞாயிற்றுக்கிழமை (01.04.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 125

# பங்கரவாதத்தை நசுக்கும் 'சார்க்' பிரகடனத்தை

# ன் நடைமுறைப்படுத்த இலங்கை வற்புறுத்து

## கூட்டுப் பிராந்திய நடவடிக்கைக்கு டங்களை உருவாக்கவும் கோரிக்கை

புதுடில்லி,ஏப்ரல் 1

தென்னாசிய நாடுகளுக்கு அச்சுறுத்தலாக உள்ள பயங்கரவாதத்தை நசுக்குவதற்கு, அவை கூட்டாகச் செயற்பட்டு சார்க் பிரகடனத்தை விரைந்து செயற்படுத்த வேண்டும் என்று இலங்கை வுரைத்துள்ளது.

று இங்கு நடைபெற்ற சார்க் நாடுகளின் வெளியுறவுச் செயலாளர்களின் முதல் நாள் நிலை தழுக் கூட்டத்தில், இந்த விடயத்தை இலங்கை முன்வைத்தது.

கூட்டத்திற்கு தலைமை வகித்த, இந்திய வெளி செயலாளர் சிவ்சங்கர் மேனன் இத்தகவலை ாளர்களிடம் தெரிவித்தார்.

கரவாதத்தை ஒழிப்பதற்கு சார்க் நாடுகள் கூட் ங்களை வகுத்துச் செயற்பட வேண்டும் என்றும் இலங்கை தரப்பில் மேலும் வலியுறுத்தப்பட்டது.

இலங்கையில், விமானப் படைத்தளம் மீது கடந்த வாரம் விடுதலைப்புலிகள் வான் தாக்குதல் நடத்திய பின்னணியில், பயங்கரவாதத்தை நசுக்குவதற்கான சட்டங்களை சார்க் அமைப்பு நாடுகள் (06ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்பார்க்கப்பட்ட முடிவுகள் எதுவுமின்றியே ஐ.நா மனித உரிமைகள் சபையின் தொடர் முடிவு!

ஜெனீவா, ஏப்.1

மனித உரிமைகளை அப்பட்டமாக மீறும் நாடுகளை எச்சரிக்கும்; கண்டிக்கும் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படாமலேயே எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக ஐ.நா. மனித உரிமைகள் சபையின் நான்காவது கூட்டத்தொடர் நேற்றுமுன்தினம் நிறைவடைந்தது.

பர்மா, ஸ்ரீலங்கா, சிம்பாப்வே ஆகிய நாடுகளைக் கண்டித்து, மேற்கு நாடுகளின் பிரதிநிதிகள் தீர்மானம் கொண்டுவருவர் என்று பெரிதாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவ்வாறு எதுவுமே நடக்கவில்லை.

ஈரான், உஸ்பெஸ்கிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளும் உலகில் மிகப் பெரிய அளவில் மனித உரிமைகளை மீறுபவை. அவை சம்பந்தமாக (06ஆம் பக்கம் பார்க்க)

## ரில் இருந்து இடம்பெயர்ந்தோர் குடியமர நிபந்தனை முன்வைப்பு

திருகோணமலை, ஏப்.1

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்தில் குழிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் போதிய வசதிகள் செய்யப்படாவிடில் தாம் மீளக் ரப் போவதில்லை என்று தெரிவித்துள்ளனர்.

த ஒகஸ்ட் மாதம் இடம்பெயர்ந்த றால் குழியைச் 90 பேரைக் கொண்ட 170 குடும்பங்கள் இப்போது ணியில் உள்ள நலன்புரி நிலையங்களில் வசித்து றன.

களை மீளக்குடியமர்த்துவதற்கு முன்னோடியாக யர்ந்த மக்களின் பிரதிநிதிகள் பதினைந்துபேர் தூருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

, சிண்ணியா பிரதேச (06ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வுப் பிரிவினரின் 10மணிநேர விசாரணையில் கூட்டமைப்பு எம்.பி

கொழும்பு, ஏப்.1

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், பயங்கரவாதத் தடுப்பு புலனாய்வுப் பிரிவினால் விசாரிக்கப்பட்டார்.

வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் இரவு 8 மணி வரை விசாரணை 10மணி நேரம் நீடித்ததாக அறியவருகிறது.

விசாரணைக்கு சமுகளிக்குமாறு கோரி அவருக்கு கடந்த 27ஆம் திகதி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்ததாக அறியவந்தது.

இது தொடர்பாக அவர் சபாநாயகருக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் (06ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விமானத் தாக்குதலை எதிர்கொள்ள அரசு தயாராகிறது

கொழும்பு, ஏப்.1

தமிழீழ விடுதலைப்புலிகளின் வான் தாக்குதலை எதிர்கொள்ளும் வகையில் புதிய வான் பாதுகாப்புத் திட்டங்களை அரசு மேற்கொள்ள உள்ளது என இணையத் தளம் ஒன்று தெரிவித்தது.

இதற்கென உலகில் பயன்படுத்தப்படுகின்ற அதி நவீன ராடர் கருவிகள், விமான எதிர்ப்பு ஆயுதங்கள் என்பனவற்றைத் துரிதமாகக் கொள்வனவு செய்ய இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் இலக்காகக் கருதப்படும் இடங்களில் விமான எதிர்ப்பு ஆயுதங்களைப் பொருத்துதல் -

புலிகளின் விமானங்கள் மீது தேவையான நேரத்தில் தாக்குதல் நடத்தக்கூடிய விமானங்களை விமானப்படை முகாம்களில் தயார் நிலையில் வைப்பது இவற்றுக்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (12)

## ள, இயக்கச்சியில் ற்று வான்தாக்குதல்

கிளிநொச்சி, ஏப்.1

பளை, இயக்கச்சிப் பகுதிகளில் நேற்று முற்பகல் 'கிபிர்' விமானங்கள் குண்டு சசுத் தாக்குதல்களை நடத்தின.

அந்தப் பகுதிகளில் இருந்து மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்ததால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. எனினும் உள்ள பல வீடுகள் சேதமடைந்தன ரிவிக்கப்பட்டது. (அ-1)

## பல்கலை.அனுமதியில் மாற்றம் செய்ய இயலாது மானிய ஆணைக்குழுக் கூட்டத்தில் கைவிரிப்பு

### பிரதி உயர் கல்வி அமைச்சர் தகவல்

யாழ்ப்பாணம், ஏப்.1

பல்கலை அனுமதியில் பாதிக்கப்பட்ட யாழ்.மாவட்ட மாணவர்களுக்கு நிவாரணமோ, மேலதிக அனுமதியோ வழங்க முடியாது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுதிபடத் தெரிவித்து விட்டது.

இத்தகவலை உயர்கல்விப் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டனர்.

அவர்களின் பாதிப்புக் குறித்து ஆராய்வதற்காக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கூட்டத்தை நடத்துமாறு அதன் தலைவரைக் கோரினேன், ஆனால் கூட்டத்தைக் கூட்ட அவர் பின்னடித்து வந்தார். (06ஆம் பக்கம் பார்க்க)

> **இன்று ஏப்ரல் முதலாம் திகதி**
> இன்று முட்டாள்கள் தினம். அதனால் சில வேலையற்ற முட்டாள்கள் உங்களை முட்டாள்களாக ஆக்க முனைவர். நீங்கள் முட்டாள்களாகி ஏமாற்றம் அடையாதீர்கள்.
> உங்கள் நன்மைக்காக...

## புதுவருடத்துக்காக கப்பலில் உடுபுடைவைகள்

யாழ்ப்பாணம், ஏப்.1

புதுவருடத்தை முன்னிட்டு புடைவை வகைகள் 'வின்ரன்' என்ற கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

காரைநகர் இறங்குதுறைக்கு வந்து சேர்ந்துள்ள இக்கப்பலில் இருந்து, அவற்றை இறக்கும் பணி ஆரம்பமாகி உள்ளது.

(06ஆம் பக்கம் பார்க்க)

## தந்தை செல்வா வு தினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.1

த செல்வாவின் 109ஆவது பிறந்த லரஞ்சலி நிகழ்வு நேற்று சனிக் காலை முற்றவெளியில் உள்ள செல்வா நினைவுத் தூபியில் நடை

த செல்வா நினைவு அறங் காவ த் தலைவர் வண. கலாநிதி எஸ். ன் தலைமையில் இந்த நிகழ்வு பெற்றது.

ழ். மாநகர சபையின் முன்னாள் (06ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர் பாதுகாப்பை உறுதிசெய்ய பிரதமரிடம் கருணாநிதி வலியுறுத்து

சென்னை, ஏப்.1

தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல் எல்லை மீறிப் போகின்றது. இதைத் தடுத்து நிறுத்தி மீனவர்கள் பாதுகாப்பாக தமது தொழிலைச் செய்வதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழக முதல்வர் மு. கருணாநிதி பிரதமரிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரதமருக்கு நேற்று எழுதியுள்ள அவசர கடிதத்தில் இக்கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

மீனவர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை விரைவுபடுத்தி, கொலையாளிகளைக்கண்டுபிடிக்க வேண்டும்.

தமிழ் நாட்டில் கரையோரப் பகுதியில் ரோந்துப் பணிகளை விஸ்தரித்து, மீனவர்கள் தமது தொழிலை எவ்வித தடையுமின்றி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கிழக்கு கரையோரம், மேற்கு கரையோரம் என இரு பிரிவுகளாக பாதுகாப்பு நடவடிக்கைகள் இருப்பதால் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. எனவே முழுக் கரையோரப் பாதுகாப்பும் ஒரே கட்டளை நிலையத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். அதன் மூலம் குழப்பம் இன்றிப் பாதுகாப்பை உறுதிசெய்ய முடியும் - என்று பிரதமருக்கு எழுதிய அக்கடிதத்தில் கருணாநிதி குறிப்பிட்டுள்ளார். (அ-1)

## கழுவாஞ்சிக்குடியில் கிளைமோர்; சிப்பாய் பலி

மட்டக்களப்பு, ஏப்.1

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடிப்பகுதியில் விசேட அதிரடிப்படையினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் காயமடைந்தார். தேசிய பாதுகாப்பு ஊடகநிலையம் இதனைத் தெரிவித்துள்ளது.

(06ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படைத் தளம் சென்று

## ண்காணிப்புக் குழு தகவல் திரட்டுவதற்கு அனுமதி அளிக்கக் கோருகிறது ஐ.தே.க

லைப்புலிகள் வான் தாக்குதல் கட்டுநாயக்கா விமானத்தளத்துக் சென்று தகவல்களைத் திரட்டு கண்காணிப்புக் குழுவினரையும் வியலாளர்களையும் அனுமதிக்க டும்.

வ்வாறு ஐ.தே.கட்சி கோரிக்கை விடுத் து. இதனை அக்கட்சியின் நாடாளு உறுப்பினர் தெரிவித்தார்.

ட்டுநாயக்கா விமானப்படைத்தளம் ரின் விமானப்படையினரால் தாக்கப்பட்டமை குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமாக விடுத்த அறிவிப்புகள் உண்மைக்குப் புறம்பானதாயின் அது குறித்து ஊடகங்கள் மூலம் அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்.

அவ்வாறு செய்யத்தவறும் பட்சத்தில் ஊடகவியலாளர்களும் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினரும் இது தொடர்பாக தகவல்களைப் பெற்றுக்கொள்ள அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் - என்று ஐ.தே.க கேட்டுள்ளது. (அ-12)

## வவுனியாவில் நேற்று இரு சிப்பாய்கள் காயம்

வவுனியா, ஏப்1

வவுனியா, தவசிக்குளம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 1.15மணியளவில் படையினர் பயணம் செய்த வாகனம் நிலக்கண்ணி வெடியில் சிக்கியது. அதனால் இரு படையினர் காயமடைந்தனர்.

காயமடைந்த படையினர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக நிலையம் அறிவித்துள்ளது. (அ-1-4)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



# யாழ். - நல்லூர் சிவஞானப்பிள்ளையார் கோயில்
# சித்திரத்தேர் வெள்ளோட்டம்



மேற்படி ஆலயத்திற்கு திருநெல்வேலி விநாயகர் சிற்பாலய ஆச்சாரி கலாபூஷணம் சு.இராசரெத்தினம் அவர்களால் வடிவமைக்கப்பட்ட புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று (01.04.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் தேர்த்திருவிழா 04.04.2007 புதன்கிழமை காலை 9 மணிக்கும் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ள தால் அத்தருணம் அடியார்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்துகொண்டு விநாயகப் பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கிறோம்.

ஆசியுரை: நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்

வாழ்த்துரை: பேராசியர் எஸ். சிவலிங்கராசா
செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன்
சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம்
சிரேஷ்ட சட்டத்தரணி கனக. கேசவன்
ஓய்வுபெற்ற அதிபர் சி. கந்தையா

மங்கள வாத்தியம் : சுந்தரம் நல்லநாயகி குழுவினர்
இராஜன் குழுவினர் } நல்லூர்.

தேர்த்திருவிழா உபயகாரர்கள்:
திரு. திருமதி யோகேந்திரன் குடும்பத்தினர் (டென்மார்க்).

(59132)

## வடக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவை வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2007 (மொழி மூலம் - தமிழ்/சிங்களம்)

2007.03.17, 18ஆம் திகதிய உதயன் மற்றும் 2007.03.19 ஆம் திகதிய வீரகேசரி, தினமின பத்திரிகைகளில் பிரசுரிக்கப் பட்ட மேற்படி விளம்பரத்தின் 2.4 ஆம் பிரிவும் பின்னிணைப்பு 01 இன் 01ஆம் இலக்க கல்வித் தகைமைகளும் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

**"2.4 தெரிவின்போது வெற்றிடமுள்ள பாடசாலை அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவை வதிவிடத்தகைமையாகக் கொண்டவர் களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, மீதமுள்ள வெற்றிடங்கள் அம் மாவட்டத்தைச் சேர்ந்த ஏனைய பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்".**

பின்னிணைப்பு 01

| இல. | பாட வகுதி | கல்வித் தகைமை |
|---|---|---|
| 01 | இரண்டாம் மொழி - சிங்களம் (தமிழ் மொழி மூலப் பாட சாலைகளில் சிங்கள மொழிப் பாடம் கற்பித்தல்.) | 1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் தமிழ் மொழி மூலமான பட்டத் துடன் பின்வருவனவற்றுள் குறைந்தது ஒன்றையாவது கொண்டிருத்தல்<br>அ. க.பொ.த. (உ/த) பரீட்சையில் சிங்களம் மொழியில் சித்தி<br>ஆ. க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்கள மொழியில் விசேட சித்தி<br>அல்லது<br>இ. பல்கலைக்கழகம் அல்லது அதனை யொத்த உயர்கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வருடத்திற் குக் குறையாத சிங்கள மொழிக்கான டிப் ளோமா.<br>அல்லது<br>2. அங்கீகரிக்கப்பட்ட பல்லைக்கழக மொன்றில் சிங்கள மொழி மூலமான பட் டத்துடன் பின்வருவனவற்றுள் குறைந் தது ஒன்றையாவது கொண்டிருத்தல்.<br>அ. க.பொ.த (உ/த) பரீட்சையில் தமிழ் மொழியில் சித்தி<br>ஆ. க.பொ.த. (சா/த) பரீட்சையில் தமிழ் மொழியில் விசேட சித்தி<br>அல்லது<br>இ. பல்கலைக்கழகம் அல்லது அதனை யொத்த உயர்கல்வி நிறுவனம் ஒன்றில் பெற் றுக்கொள்ளப்பட்ட ஒரு வருடத்திற்குக் குறையாத தமிழ் மொழிக்கான டிப்ளோமா. |

**தெ.து. விஜயலெட்சுமி,**
**செயலாளர்,**
**மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,**
**வடக்கு மாகாணம்.** (கி 50699)

**விற்பனைக்கு** சிங்கிள், டபிள் கட்டில்கள், அலுமாரிகள், சோக்கேஸ், தையல் மெசின், ஒவ்பிஸ் ரேபிள், V.C.D. டெக், றேடியோ என்பன விற்பனைக்குண்டு, பார்வையிடும் நேரம் பிற்பகல் 3 மணிக்குப் பின்பு.
தொடர்பு: S.S. நாதன், இல. 16/3, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே. 0776146434.

**தவறிவிட்டது**

சோமர் வீதி, தாவடி தெற்கு, கொக்குவிலைச் சேர்ந்த பாலகோவிந்தன் கமல்ராஜ் என்பவரது தேசிய அடையாள அட்டை (833155237V), விசேட அடையாள அட்டை (0906020414) என்பன சுதுமலைக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
**தொடர்புகளுக்கு: 021 459 1989.**

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 45 வயதுடைய விவாகரத்து செய்த லண்டனில் P.R. உள்ள மணமகனுக்கு 34 - 38 வயதில் மணமகள் தேவை.
**தொடர்பு: 0112360799**
**0779116310.**




**CB Computer Academy**
Station Road, Kondavil. ☎:-021-4590291

வங்கியாளர்களே!
CBF பரீட்சை முடிந்துவிட்டதா?
ACBF பரீட்சைக்குத் தயாராகின்றீர்களா?
இன்றே இணையுங்கள்...




**CB Computer Academy**
Station Road, Kondavil. ☎:-021-4590291

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



*திருமதி செல்வராசா இராசம்மா (மீசாலை)*

தோற்றம்: 22.04.1952 மறைவு: 03.03.2007

பாதிவழிதனிலே எமையிங்கு தவிக்கவிட்டு
நீண்டதூரம் சென்றாயோ எங்கள் அம்மா!
ஏதுவழி தெரியாமல் ஏங்கியே கலங்குகின்
-றோம்.
மீண்டும் ஒருமுறை எமைக்காண வாராயோ?

கடந்த 03.03.2007 சனிக்கிழமை சிவபதம் அடைந்த எமது தாயாரின் 31ஆவது நினைவு நாள் நிகழ்வுகள் நாளை (02.04.2007) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால், இந்நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.* (58970)

தகவல்:
பிள்ளைகள், சகோதரர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 25 . 09 . 1925



மறைவு: 02 . 03 . 2007

*திருமதி சரஸ்வதி வயிரமுத்து*

எங்கள் உள்ளமெல்லாம் உறையும்
பாசத்தோடும் பண்போடும் வளர்த்த எங்கள்
அன்புத்தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
கண்ணீர் பூக்கொண்டு பிரார்த்திக்கின்றோம்.

*அச்செழு,*
*நீர்வேலி.* (59163)

உங்கள் நினைவில் வாழ்கின்ற
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே.: 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## வான் புலிகளின் தாக்குதலும் இந்தியாவின் பிரதிபலிப்பும்

விடுதலைப் புலிகளிடம் விமானப் படையணி இருக்கும் விவகாரம் சர்வதேச ரீதியில் பெரும் சர்ச்சையைக் கிளப்பும் என எதிர்பார்த்த கொழும்பு வட்டாரங்கள் ஏமாற்றமடைந்திருக்கின்றன.

சட்ட ரீதியான அரசாக இல்லாத ஒரு தரப்பிடம் - அதுவும் 'பயங்கரவாத' இயக்கம் ஒன்றிடம் - விமானப்படை இருப்பது பெரும் ஆபத்தான விடயம் என்று பெரும் பிரசாரத்தை முன்னெடுத்து, அதன் மூலம் சர்வதேச சமூகத்தைப் புலிகளுக்கு எதிராகத் திருப்பிவிடும் கொழும்பின் முயற்சி எதிர்பார்த்த பலனைத் தரவில்லை என்பதையே ஆரம்பகட்டத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

புலிகளிடம் விமானப் படையணி இருக்கும் விவகாரம் முதலில் இந்தியாவில்தான் பெரும் அதிர்வுகளையும், அரசியல் எதிர்வினைகளையும் ஏற்படுத்தும் எனக் கொழும்பு எதிர்பார்த்தது. ஆனால், அப்படி ஒன்றும் பெரிதாக நடக்கவில்லை. கொழும்பின் நம்பிக்கை தகர்ந்துவிழும் வகையிலேயே விவகாரங்கள் அரங்கேறியுள்ளன.

புலிகளின் வான் படையணி குறித்து இந்தியா, உத்தியோகபூர்வ கண்டனம் எதனையும் வெளியிடவில்லை. ஆக, வழமைபோல புலி எதிர்ப்புப் பிரசாரத்தில் ஈடுபட்டுவரும் சில புதுடில்லி ஊடகங்கள் மட்டும் அதிகாரிகளையோ, அமைச்சுகளையோ நேரடியாகக் குறிப்பிடாமல், புலிகளின் வான் படையணி குறித்து இந்தியா கவலை கொண்டிருப்பதாகச் செய்தி வெளியிட்டதோடு விவகாரம் அங்கு அடங்கி விட்டது. அந்தச் செய்தி கூட இவ்விடயத்தில் தனிப்பட்ட ஈடுபாடு கொண்ட வேறு பிற தரப்புகளின் 'விதைப்பாக' இருக்கக் கூடும் என்ற சந்தேகமும் எழாமல் இல்லை.

புலிகளின் வான் படையணி தொடர்பாக இந்தியா நடந்து கொள்ளும் போக்கு - வெளிப்படுத்தும் செயற்பாடு - கொழும்பின் நிலைப்பாட்டில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தமது வான் படையணி இலங்கையின் பௌத்த - சிங்கள பேரினவாத அரசுக்கு எதிரானதேயொழிய, இந்தியாவுக்கு எதிரானதல்ல என்றும், இந்தியாவின் நலனுக்கு எதிராக இவ்விடயத்தில் எந்தச் சந்தர்ப்பத்திலும் தமது இயக்கம் செயற்படாது என்பதையும் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் உறுதிபடத் தெரிவித்திருக்கின்றார். இந்த விவகாரத்தில் புலிகளின் அந்த உறுதிமொழி இந்தியாவைத் திருப்திப்படுத்தப் போதுமானதா என்று சொல்லமுடியாது.

ஆனால், புலிகளின் வான் படையணி இருப்பது பற்றிய தகவலை கடந்த 26ஆம் திகதி கட்டுநாயக்கா விமானப்படைத் தளம் மீதான தமது வான் தாக்குதல் மூலம் புலிகள் வெளிப்படுத்தி, உறுதிப்படுத்தி, அத்தாக்குதலுக்கு உரிமை கோரிய பின்னர், இந்தியா நடந்துகொண்ட விதம் கொழும்புக்கும் சர்வதேச சமூகத்துக்கும் சில செய்திகளை - படிப்பினைகளை உணர்த்தியிருப்பதையும் நாம் உணரமுடிகின்றது.

புலிகளிடம் வான் படையணி இருப்பதை புலிகள் கட்டுநாயக்காத் தாக்குதல் மூலம் நிரூபித்ததை அடுத்து, இந்தியா தனது தென்கரையோரத்தில் புதிய ராடார்களை நிறுவி, தெற்கு முனையில் தனது கண்காணிப்பை அதிகப்படுத்தியது. அது தவிர, புலிகளின் வான் படையணிக்கு எதிராகக் கருத்து வெளியிட்டு, அதைக் கண்டிக்கவோ, அந்தப் படையணி இல்லாமல் செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

ஆக, புலிகளிடம் வான் படையணி இருந்தால் இருந்து விட்டுப் போகட்டும். அது இலங்கை அரசின் - கொழும்பின் - பிரச்சினை. அந்தப் படையணியால் இந்தியப் பிராந்தியத்துக்கோ, அதன் இறைமைக்கோ ஆபத்து இல்லாவிட்டால் சரி என்ற மனப்போக்கில்தான் இந்தியாவின் செயற்பாடும், அதன் இராஜதந்திர பிரதிபலிப்புகளும் இருந்தன.

இந்தியாவின் இந்தப் போக்கு வேறு சில ஊகங்களையும் வெளிப்படுத்தி நிற்பதையும் நாம் கவனத்தில் கொள்ளலாம்.

யாழ். குடாநாடு மீது விடுதலைப் புலிகள் இலக்கு வைக்கும் சமயங்களில் எல்லாம் அரசியல் அவதானிகள் தரப்பில் ஒரு கருத்து முன்வைக்கப்படுவது வழமை. பூகோள வடிவமைப்பில் யாழ். குடாநாட்டின் உச்சந்தலையாக இருப்பது பலாலி விமான நிலையம். தென்னிந்தியாவுக்கு மிக நெருக்கமாக உள்ள விமான ஓடுபாதை அங்குதான் அமைந்துள்ளது. அத்தகைய விமானத்தளம் புலிகள் வசம் வீழ்வதை இந்தியா ஒருபோதுமே அனுமதிக்காது என்றும், அதன் காரணமாக யாழ். குடாநாட்டைக் கைப்பற்றும் புலிகளின் கனவுக்கு இந்த இலங்கை தன் இயலாமையால் விட்டுக் கொடுத்தாலும், இந்தியா இடமளிக்கவேமாட்டாது என்ற ஒரு நம்பிக்கை கொழும்பு அரச சார்பான வட்டாரங்களில் மிகுதியாக இருந்து வந்தது.

ஆனால், வன்னியில் புலிகளின் வான் கட்டமைப்பு நிறுவப்பட்டு, அதன் தாக்குதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு, அது குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னரும் அதற்கு எதிராகக் கொந்தளித்து எழுவதற்கு இந்தியா முன்வராத நிலையில், பலாலி விமானத்தளம் கைமாறக் கூடாது என்பதற்காக இந்தியா ஏதேனும் உறுதியான - ஸ்திரமான - பதில் நடவடிக்கைகளை எடுக்கும் என்ற எதிர்பார்ப்பும் நிறைவேறும் சந்தர்ப்பம் அற்றுப் போகிறது.

புலிகளின் விமானப்படை அணி எங்கிருந்தாலும், அதனால் தனது நலனுக்கும் தனது பிரதேசத்திற்கும் பாதிப்பு இல்லாத வரையில் அது குறித்து இந்தியா அதிகம் அலட்டிக்கொள்ளப்போவதில்லை என்பது சாடைமாடையாகவேனும் வெளிப்படத் தொடங்கியிருக்கிறது. கொழும்புக்கு நிச்சயம் குழப்பத்தைத் தந்திருக்கும் எனக் கருதலாம்.

தவிரவும், புலிகளின் விமானப்படை அணி குறித்து இந்தியாவிடமிருந்து மட்டுமல்ல, ஏனைய சர்வதேச நாடுகளிடமிருந்தோ, ஐ.நா. போன்ற அமைப்புகளிடமிருந்தோ கண்டனமோ, எதிர்ப்போ, விசனமோ எழாதமையும் கொழும்புக்குப் பெரும் ஏமாற்றத்தையும், அதிர்ச்சியையும், எரிச்சலையும் தந்திருப்பதையும் உணர முடிகின்றது.

புலிகளின் வான் படையணிக்கு எதிராக சர்வதேச நிலைப்பாட்டை உருவாக்கும் கொழும்பின் எத்தனம் இதுவரை பலனளித்ததாக இல்லை. இந்த முயற்சியில் இலங்கை பின்னடைவு கண்டதற்குப் பல காரணங்கள்.

இலங்கை விமானப் படை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மீது கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சுக்களை நடத்தி அப்பாவிப் பொது மக்களையும் பெருமளவில் கொன்றொழித்ததோடு மட்டுமன்றி தப்பிப்பிழைத்தவர்களின் உயிர் வாழ்வுக்குப் பெரும் சேதங்களை ஏற்படுத்தி வருகின்றமையும் -

வான் புலிகள் சரியாக இராணுவ இலக்கு மீதே தாக்குதல் நடத்தியமையும் - கூட, இந்தக் காரணங்களில் அடங்கும் என்று கருதலாம்.

இவற்றின் தாற்பரியம் கொழும்புக்குப் புரியுமோ, என்னவோ ......!

# ஊடகத்துறைமீது நடத்தப்படும் சகலவித தாக்குதல்களையும் தடுத்து நிறுத்துங்கள்

## ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு சுதந்திர ஊடக அமைப்பு அறிக்கை

இலங்கையில் இனப்பிரச்சினை மோதலில் சம்பந்தப்பட்டுள்ள தரப்புகளால் ஊடகவியலாளர்கள் மற்றும் வெளியீட்டு அமைப்புகள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள சகலவிதமான அச்சுறுத்தல்கள், இடையூறுகள், ஆள்கடத்தல்கள் மற்றும் தாக்குதல்கள் யாவற்றுக்கும் உடனடியாக முற்றுப்புள்ளி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கை சுதந்திர ஊடக அமைப்பு ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு மார்ச் மாதம் 27 ஆம் திகதி சமர்ப்பித்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு வற்புறுத்திக்கேட்டுள்ளது.

இப்போது நடைபெற்றுவரும் மனித உரிமைகள் சபையின் மாநாட்டுக்கு நேரில் சமர்ப்பித்துள்ள கவன ஈர்ப்பு அறிக்கையொன்றிலேயே சுதந்திர ஊடக அமைப்பு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அவதானிப்புகளும் சிபார்சுகளும் வருமாறு:-

✱ ஊடகவியலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தவர்களின் கொலைகள், கொலை அச்சுறுத்தல்கள் தொடர்பாக முழுமையான, வெளிப்படையான புலன் விசாரணைகள் காலம் தாழ்த்தாது மேற்கொள்ளப்படவேண்டும். ஊடகவியலாளர்கள் பகிரங்கமாக அவதூறுக்கு உட்படுத்தப்படும் நடைமுறை நிறுத்தப்படவேண்டும்.

✱ பத்திரிகைத்துறைச் சுதந்திரம், கருத்து வெளியிடும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகளை மாற்றிக்கொள்வதோடு, நேரடியாகவோ மறைமுகமாகவோ செய்தித்தணிக்கையைக் கொண்டுவருவதற்கான செயற்பாடுகளையும் கைவிட வேண்டும்.

அரசு தனது வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும்

✱ மாற்றுக் கருத்துக்களை சகித்துக்கொள்வது உட்பட ஜனநாயக நடைமுறையான சட்டரீதியான செயற்பாட்டுக்கு இலங்கை அரசு திரும்ப வேண்டிய அவசியம் உணர்த்தப்படவேண்டும். பத்திரிகைத்துறையின் கருத்துச் சுதந்திரத்திற்கு ஏற்பட்டுள்ள மோசமான சீரழிவு நிலையைச் சீர்செய்வதற்கு இலங்கை அரசு கவனம் செலுத்தும் வகையில் நடவடிக்கை எடுப்பதாக மனித உரிமை சபைக்கு ஏற்கனவே அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்.

. பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசர காலச் சட்டவிதிகள் சுதந்திர ஊடகங்களை வாயடைக்கச் செய்கின்றன. இந்தச் சட்டங்கள் மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுக்கின்றன. இவை இலங்கையில் ஜனநாயக ஆட்சிமுறைக்கும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் பாரதூரமான அச்சுறுத்தலாக இருந்துவருகின்றன. ஏற்கனவே இச்சட்டங்களின் கீழ் பத்திரிகையாளர்களும் ஊடகவியலாளர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தடுத்துவைத்து விசாரிக்கப்படுகின்றனர்.

**தமிழ் ஊடகவியலாளர் மீதான அச்சுறுத்தல்கள்**

✱ 2001ஆம் ஆண்டுக்கும் 2006 ஆம் ஆண்டு ஜூலை மாதத்துக்குமிடையில் கொல்லப்பட்டுள்ள ஊடகவியலாளர்களில் ஒரு சிங்களவரைத் தவிர ஏனைய அனைவரும், இலங்கையில், தமிழர்களாகவே இருந்துள்ளனர்.

தமிழ் ஊடகங்களைத் திட்டமிட்டமுறையில் மௌனம் கொள்ளச் செய்வதானது கருத்து வெளியிடும் சுதந்திரம் சீரழிந்து வருவதற்கான மோசமானதோர் அறிகுறியாகும்.

வடக்குக் கிழக்கிலுள்ள ஊடகவியலாளர்கள் படையினராலும் ஆயுதம் தரித்த கும்பல்களாலும் நாள்தோறும் அச்சுறுத்தலுக்கும் இடைஞ்சல்களுக்கும் ஆளாகி வருகின்றார்கள். சில தமிழ்ப் பத்திரிகைகள் எரிக்கப்பட்டுள்ளன. முகவர்கள் அவைகளை விற்கவேண்டாம் என அச்சுறுத்தப்பட்டுள்ளனர். பத்திரிகை அலுவலகங்கள் சூறையாடப்பட்டும், எரிக்கப்பட்டும், நாசப்படுத்தப்பட்டும், அவை மீது குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டும் உள்ளன. இவைகளைச் செய்பவர்கள் தப்பித்துக் கொள்வதற்கு வழியிருப்பதால் பத்திரிகையாளர்களால் தமது தொழில்சார் கடமைகளை - தமக்குரிய கடப்பாடுகளைச் - செய்ய முடியாமல் உள்ளது.

**அச்சுத்தாள் தட்டுப்பாடும் தொங்கவிட்டு வாசிக்கும் துர்ப்பாக்கியமும்**

வடக்கில் பத்திரிகை அச்சிடும் தாள் எடுத்துச் செல்லப்படாமல், அதன் தட்டுப்பாடு காரணமாக அங்கு பத்திரிகைகளை வெளியிடும் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அச்சிடும் தாள்கள் தட்டுப்பாட்டினால் அங்குள்ள பத்திரிகை நிறுவனங்கள் தாம் அச்சிடும் பத்திரிகைகளின் எண்ணிக்கைகளைக் குறைத்துள்ளன.

அதனால், பத்திரிகை விற்பனையாளர்கள் பத்திரிகைகளை ஒட்டித் தொங்கவிட்டு அவற்றை வாசிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை வட பகுதி மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இனப்பிரச்சினை மோதலில் சம்பந்தப்பட்டுள்ள எல்லாத் தரப்புகளும் ஊடகங்களுக்கு எதிராகத் தாக்குதல்களை நடத்தி இருப்பதைக் கருத்திற்கொண்டு, அதனால் இலங்கையில் ஊடக சுதந்திரத்திற்குப் பெரும் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாலும் மனிதஉரிமைகளைப் பலப்படுத்துவதற்குச் சவாலாக அது அமைவதாலும் அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகள், விடுதலைப் புலிகள், கருணா குழு மற்றும் ஆயுதம் தாங்கிய துணைப் படைகளைப் பலமாகக் கண்டித்து ஐ.நா. அறிக்கையிட வேண்டும்.

கருத்து வெளியிடும் சுதந்திரம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையிடும் விசேட அதிகாரி ஒருவரை இலங்கைக்கு வரும்படி அழைப்பு விடுத்தல், மனித உரிமைகள் தொடர்பான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தை இலங்கையில் விஸ்தரிக்குமாறு வலியுறுத்துதல், இந்த வகை அழுத்தங்கள் மூலம் மனித உரிமைகள் தொடர்பான தனது கடப்பாட்டினை இலங்கை அரசு வெளிப்படையாக மீண்டும் உறுதிசெய்துகொள்ளமுடியும். காலத்துக்குக் காலம் வெளிப்படுத்தப்படும் விமர்சனங்களையும் தயக்கமின்றி எதிர்கொள்ளமுடியும் - என்று சுதந்திர ஊடக இயக்கம் சமர்ப்பித்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-ப)

# குற்றச் செயல்கள் குறைந்த யாழ்ப்பாணம்

**வடமாகாணத்தின் பொலீஸ் சுப்பிரிண்டென்டாகப் பணியாற்றியவர் ஆர்.சுந்தரலிங்கம். கொழும்பில் பிரதிப் பொலீஸ்மா அதிபராகவும் நீண்ட காலம் சேவையாற்றினார். அதன் பின்னர் "இன்ரபோல்" எனப்படும் சர்வதேச பொலீஸ் நிறுவனத்தில், நாசகாரத் தடுப்புப் பிரிவிலும் சேவை புரிந்தவர். இப்போது லண்டனில் வசித்து வருகிறார்.**

**"எனக்குத் தெரிந்த யாழ்ப்பாணம்" என்ற தலைப்பில், தமது பழைய ஞாபகங்களை இரைமீட்டு அவர் எழுதிய கட்டுரை, கொழும்பில் இருந்து வெளிவரும் "த ஐலண்ட்" பத்திரிகையில் (25.03.2007 இல்) பிரசுரமாகியது.**

**அதன் சாராம்சத்தை இங்கு தருகின்றோம். அச்சுத்தாள் தட்டுப்பாடு காரணமாக ஏற்பட்டுள்ள இட நெருக்கடியினால் முழுமையாகத் தரமுடியவில்லை.**

நான் வடமாகாண பொலிஸ் சுப்பிரிண்டனாகக் கடமையாற்றிய 1966 - 72 காலப்பகுதியைத் திரும்பிப்பார்க்கிறேன்.

டட்லி சேனநாயக்கா, சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகிய இரு பிரதமர்களினது ஆட்சிக்காலத்திலும் நான்வடமாகாண பொலிஸ் சுப்பிரிண்டனாகப் பணிபுரிந்துள்ளேன். அப்போது வவுனியா பொலிஸ் பிரிவும் யாழ்ப்பாணத்துடனேயே இணைந்திருந்தது.

ஜி.ஜி., செல்வா ஆகிய இருவரினதும் தலைமையிலான தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக்கட்சி ஆகிய இரு கட்சிகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட இருபது நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்து டட்லி சேனநாயக்கா 1966இல் தேசிய அரசாங்கத்தை அமைத்தார். அதில் மு.திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராகப் பதவி வகித்தார்.

மாவட்ட, மாகாண மட்டத்தில் அதிகாரத்தைப் பகிர்வதற்கான திட்டம் ஒன்றைத் தயாரிப்பது அவரது கடமையாக இருந்தது.

**டட்லியின் யாழ். விஜயம்**

டட்லி சேனநாயக்கா இனங்களுக்கிடையில் நட்பை உருவாக்க முனைந்தார். இதன் உச்சக்கட்டமாகப் பிரதமரின் யாழ்ப்பாண விஜயம் அமைந்தது. 1967ஆம் ஆண்டு யாழ். நவீன சந்தைக்கான அடிக்கல்லை நாட்டினார் பிரதமர். அதுவரை எந்தவொரு அரசியல் வாதிக்கும் இல்லாத வகையில் மகத்தான வரவேற்பு டட்லி சேனநாயக்காவுக்கு யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சிங்கள

**மூத்த பொலீஸ் அதிகாரி ஒருவரின் அந்த நாள் ஞாபகம்**

அமைச்சர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வதைத் தமது கடமைகளில் ஒன்றாகக் கருதி விஜயம் செய்யத் தொடங் கினர்.

திருச்செல்வம் பதவி விலகியதைத் தொடர்ந்து உள்ளூராட்சி அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்ட ஆர். பிரேமதாசாவும், தாம் பதவியேற்றதும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார். பிரேமதாசாவுக்குப் பலாலி விமான நிலையத்திலிருந்து செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. அதேபோன்ற செங்கம்பள வரவேற்பு பின்னர் விஜயம் செய்த என்.எம். பெரேரா, கொல்வின், பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, மைத்திரிபால சேனநாயக்கா, பீற்றர் கெனமன் ஆகியோருக்கும் வழங்கப்பட்டது ஞாபகத்துக்கு வருகின்றது.

**குற்றச்செயல்கள் குறைந்த யாழ்ப்பாணம்**

1972ஆம் ஆண்டு நான் யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்படும் வரை அங்கு தமிழ் - சிங்கள உறவு நல்லதாகவே இருந்தது.

அந்தக் காலத்தில் சட்டம், ஒழுங்கு என்பன மிகவும் சிறப்பாகக் கடைப் பிடிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தவர்கள் சமாதானத்தை விரும்புபவர்கள். வட மாகாணம் இலங்கையிலேயே குற்றச்செயல்கள் குறைந்த மாகாணமாக விளங்கியது. வருடத்தில் 32 கொலைகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்தன.

சாதி ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டங்களின்போது, நாம் ஆயுதங்களைப் பாவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கிணற்றில் தண்ணீர் அள்ளுவதற்கும் ஆலயத்தினுள் பிரவேசிப்பதற்கும் உயர் சாதியினர் தாழ்த்தப்பட்டோருக்குத் தடை விதித்திருந்தனர் என்பதும் இங்கு கூறப்பட வேண்டிய ஒன்று.

**கள்ளக்கடத்தல் பிரபல்யம்**

பாதுகாப்புப் படையினரைப் பொறுத்தவரை ஒரேயொரு பிரச்சினைக்குத்தான் அவர்கள் எப்போதும் முகம் கொடுக்கவேண்டியிருந்தது. அது கள்ளக்கடத்தல். வல்வெட்டித்துறையிலிருந்தே அது அதிகமாக நடைபெற்றது. பாக்குநீரிணையினூடான இருவழிக்கடத்தல் மையமாக வல்வெட்டித்துறை விளங்கியது. தேங்காய் எண்ணெய், கராம்பு, கறுவா போன்ற வாசனைத் திரவியங்கள் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கும் காஞ்சிபுரம், மணிப்பூர் சேலைகள், பளையகார்ட், சங்கு மார்க் சாரம், ஊதுபத்திகள், அத்தர், தமிழ் சினிமா சஞ்சிகைகள், பாட்டுப் புத்தகங்கள் என்பன இந்தியாவிலிருந்து இலங்கைக்கும் கடத்தப்பட்டன.

**'நான் காமாட்சியை அனுப்புகிறேன், நீ மீனாட்சியை அனுப்பு'**

இவற்றுடன் அபினும் இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்டது. அப்போது அபின் இலங்கையில் மிகவும் கிராக்கியான ஒரு பொருளாக இருந்தது. "நான் காமாட்சியை அனுப்புகிறேன் நீ மீனாட்சியை அனுப்பு" போன்ற சங்கேத உரையாடல்கள் கடத்தல்காரரிடையே பாவனையிலிருந்தன.

கள்ளக்கடத்தல் பற்றிய தகவல்கள் கிடைக்கும் பட்சத்தில், அதைத் தடுக்க எம்மால் முடிந்தது. எனினும் கடத்தலை முற்றாக நிறுத்த முடியவில்லை. இதைத்தவிர வேறு கிளர்ச்சிகளோ, ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறைகளோ, ஆயுதக்குழுக்களோ எதுவுமே அப்போது கிடையாது.

1970ஆம் ஆண்டு தரப்படுத்தல் அறிமுகமானதைத் தொடர்ந்து இளைஞர்களின் பொக்கெற்றுகளில் கலகத்தை உருவாக்கும் கருவிகள் காணப்பட்டன. அவற்றைத் தவிர வன்முறையுடன் கூடிய அரசியல் நடவடிக்கைகள் எவையும் நான் 1972ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறும்வரை இடம் பெறவில்லை.

**முழு வடமாகாணத்திலும் ஆயிரம் பொலிஸாரே சேவையில்!**

சுமார் ஆயிரம் பொலிசார் வடமாகாணத்தின் ஆறு மாவட்டங்களிலுமிருந்த 24 பொலிஸ் நிலையங்களிலும் கடமையிலீடுபட்டிருந்தனர்.

பலாலி இராணுவத் தளம் பிரதான இராணுவ முகாமாக இருந்தது. பிராந்தியத்திலிருந்த ஆறு இராணுவ நிலைகளிலும் 700 இராணுவ வீரர்கள் கடமையிலீடுபட்டிருந்தனர். காரைநகரில் நூறு கடற்படைச் சிப்பாய்களைக் கொண்ட கடற்படைத் தளம் இருந்தது. இங்கு இரு சிறிய ரோந்துப் படகுகள் மட்டுமே இருந்தன. தென்னிந்தியாவிலிருந்து வரும் சட்டவிரோதக் குடியேற்றவாசிகளைத் தடுப்பதே இவர்களது கடமையாக இருந்தது. கடற்படையினருக்கோ இராணுவத்தினருக்கோ அப்போது பெரிதாக வேலைகள் எதுவும் இருக்கவில்லை.

**தமிழில்: ந.பரமேஸ்வரன்.**

(மிகுதி அடுத்த வாரம்)

**நாளை**

பங்குனி - 12
திங்கட்கிழமை
26.03.2007
திதி: அட்டமி
பிற்பகல் : 05.19
நட்சத்திரம்: திருவாதிரை
முன்னிரவு : 09.43
சுபநேரம் : 12.15 - 01.45
ராகுகாலம் : 07.45 - 09.15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியை கறைபடியவைத்த வூல்மரின் கொலை

கிரிக்கெட்டுடன் தனது வாழ்க்கையை ஆரம்பித்து அதற்காகவே தனது உயிரையும் அர்ப்பணித்துக்கொண்டுள்ளார் இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரரும் பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளருமான பொப் வூல்மர்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியொன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும்வேளை - கிரிக்கெட் உலகில் சிறந்த அணிகளில் ஒன்றாகக் கருதப்படும் பாகிஸ்தான் அணியை வழிநடத்திச் சென்றிருந்தவேளை - வூல்மர் கொலைசெய்யப்பட்டமை கிரிக்கெட் உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளதுடன், இம்முறை நடைபெறும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் ஒரு கறை படிந்த வரலாற்றை உருவாக்கியுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்றுவரும் உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் - அயர்லாந்து அணிகளுக்கிடையே நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தான் படுதோல்வியடைந்த ஒருசில மணிநேரத்தில் இடம்பெற்ற இக் கொலைச் சம்பவம் கிரிக்கெட் ரசிகர்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், கிரிக்கெட் விற்பன்னர்களிடையே கொந்தளிப்பையும் ஏற்படுத்தியிருந்தது.

வூல்மர் தான் தங்கியிருந்த ஹோட்டல் அறையில் வைத்தே கொலை செய்யப்பட்டுள்ளார். இதனால் இது நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டதா என்ற சந்தேகத்தை இப்போது ஏற்படுத்தியுள்ளது.

பயிற்சியாளர்கள் வரிசையில் மிகவும் மரியாதைக்குரியவராகவும், கிரிக்கெட் நுட்பங்களை நன்கு தெரிந்துகொண்ட விற்பன்னராகவும், நல்லொழுக்கம் மிக்க பயிற்சியாளராகவும் விளங்கியவர் பொப் வூல்மர்.

வூல்மரின் கொலை பற்றிப் பல புதிய திடுக்கிடும் தகவல்கள் இப்போது வெளியாகிக்கொண்டிருக்கின்றன. கொலை தொடர்பான உண்மையான - சரியான தகவல்களைத் தெரிந்து கொண்டு விசாரணைகளை மேற்கொள்வதில் ஜமேய்க்காப் பொலிஸார் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

### தலைசிறந்த பயிற்றுவிப்பாளர்

இந்தியாவின் கான்பூர் மாநிலத்தில் 1948ஆம் ஆண்டு பிறந்தார் றொபேட் அன்றூ வூல்மர். 1970 களில் கிரிக்கெட்டில் ஒரு சகல துறை ஆட்டக்காரராக உருவெடுத்தார் அவர்.

இதன் காரணமாக 1975ஆம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கு அழைக்கப்பட்டார். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியே அவரது முதலாவது சர்வதேசப் போட்டியாக அமைந்தது.

இதன் பின்னர் 1984ஆம் ஆண்டுவரை இங்கிலாந்து அணியில் வூல்மரின் ஆதிக்கம் தொடர்ந்தது.

1991ஆம் ஆண்டு வூல்மரின் வாழ்வில் புதிய அத்தியாயம் ஒன்று ஆரம்பமானது. தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளராக அவர் நியமிக்கப்பட்டார். வூல்மர் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து தென்னாபிரிக்க அணி சர்வதேசப் போட்டிகளில் புதிதாக விஸ்வரூபம் எடுத்தது.

வூல்மர் பயிற்சியாளராக இருந்த காலப்பகுதியில் 15 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய தென்னாபிரிக்கா 10 போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளது.

இதன்பின்பு 1999ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்கா தோல்வியடைந்ததையடுத்து வூல்மரின் பயிற்சிக்காலம் முடிவுக்கு வந்தது.

தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் உயர்நிலை முகாமையாளர்களில் ஒருவராக வூல்மர் கடமையாற்றி வந்தார். 2004ம் ஆண்டு அவர் மீண்டும் பாகிஸ்தான் அணிக்குப் பயிற்சியாளராக அழைக்கப்பட்டார். பாகிஸ்தான் அணிக்கு பயிற்சியாளராக நியமிக்கப்பட்டது முதல் வூல்மரின் கிரிக்கெட் பயணம் சவால் மிகுந்ததாகவே அமைந்தது. பாகிஸ்தான் அணியில் உள்ள வீரர்களின் நடத்தைகள் தொடர்பாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்களில் இருந்து அந்த அணியை தூக்கி நிறுத்தி நிலைக்க வைப்பதில் கடும் சவால்களையும் விமர்சனங்களையும் எதிர்கொண்டார் வூல்மர். பாகிஸ்தான் அணி கிரிக்கெட் பயணங்களை மேற்கொண்டு வேறு நாடுகளுக்குச் செல்லும்போது அந்த அணி வீரர்களில் சிலர் கிரிக்கெட் ரசிகர்கள் மற்றும் தங்கியிருக்கும் ஹோட்டல்களில் ஒழுக்கமற்ற முறையில் நடந்துகொள்கின்றமை, போதைப் பொருள்களை உட்கொள்கின்றமை தொடர்பாக அண்மைக் காலமாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்களால் மனம் நொந்து போயிருந்த வூல்மர் வீரர்களை நன்னடத்தை உள்ளவர்களாக மாற்றுவதற்குக் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டார் எனக் கூறப்படுகின்றது.

பாகிஸ்தான் அணியில் அண்மைக்காலமாக அரசியல் தலையீடுகள் அதிகரித்தமை வூல்மருக்கு மேலும் தலையிடியைக் கொடுத்தது.

### கலைந்துபோன கனவும் வூல்மரின் கொலையும்

எனவே, இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைப்பதற்கு இந்த உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணியைச் சரியான முறையில் பயன்படுத்தத் திட்டமிட்டிருந்தார் அவர். ஆனாலும், அந்தத் திட்டம் கைநழுவிப் போனது.

அயர்லாந்துடனான போட்டியில் பாகிஸ்தான் தோல்வடைந்தமையால் வூல்மரின் திட்டம் தவிடுபொடியாக, பாகிஸ்தானின்

**அதிரன்**

உலகக் கிண்ணக் கனவும் கலைந்துபோனது.

இந்தத் தோல்வியை பாகிஸ்தான் அணி சந்தித்து ஒருசில மணிநேரங்கள் கழிந்திருந்த வேளை மற்றொரு அதிர்ச்சியான - தோல்வியான செய்தி பாகிஸ்தான் அணிக்குக் கிடைத்தது. அதுதான் வூல்மர் கொலை செய்யப்பட்ட செய்தி.

வூல்மர் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக தற்போது வெளியாகும் தகவல்கள் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள் ளன.

அவர் கழுத்துநெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் என அவரது பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வூல்மர் தங்கியிருந்த ஹோட்டல் அறையின் தரையில் விஷம் சிந்திக் கிடந்ததாகவும் அவரது கழுத்தில் இரண்டு காயங்கள் உள்ளதாகவும் ஜமெய்க்கா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனவே, அவரைக் கழுத்து நெரித்து வாய்க்குள் விஷம் ஊற்றப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் இப்போது எழுந்துள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் அணி வீரர்களிடமும் விசாரணை நடைபெற்றுள்ளது. அவரது ஹோட்டல் அறைக்கு பக்கத்து அறையில் தங்கியிருந்த பாகிஸ்தான் வீரர் கனேரியாவிடம் கடும் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வூல்மரின் அறைக்கு மேலே உள்ள அறையில் தங்கியிருந்த மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் லாராவிடமும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். கொலை செய்யப்பட்டவேளை லாராவுக்கு ஏதாவது சத்தங்கள் கேட்டனவா? என்பது தொடர்பாகவே அவரிடம் விசாரிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில வருடங்களாக சூதாட்ட சர்ச்சையில் சிக்கித் தவிக்கிறது கிரிக்கெட். சில அணிகளின் முக்கிய வீரர்கள், பயிற்சியாளர்கள், முகாமையாளர்கள் எனப் பலர் இந்தச் சூதாட்ட வலையில் சிக்கியிருக்கிறார்கள். இது தொடர்பான விரிவான விசாரணை அறிக்கைகள் இதுவரை வெளிவிடப்படாத நிலையில் வூல்மரின் கொலை நிகழ்ந்திருக்கிறது.

இந்தக் கொலையில் சூதாட்டப் புள்ளிகளுக்குத் தொடர்பிருக்காலம் என ஜமெய்க்கா பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

பாகிஸ்தான் அணியின் ரசிகர்களாக வந்த மூன்று பேருக்கு இதில் தொடர்பிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இதனிடையே புதிய தகவல் ஒன்று இப்போது வெளியாகியுள்ளது.

பொப் வூல்மரின் கொலையில் தீவிரவாதிகளில் முக்கிய புள்ளியான தாவூத் இப்ராகிமுக்கு நேரடித் தொடர்பு இருப்பதாக இங்கிலாந்துப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சூதாட்டமே வூல்மரின் கொலைக்கு முக்கிய காரணம் என தற்போது வலுவாக நம்பப்படுகின்றது. கொலை செய்யப்படுவதற்கு முன்னர் சூதாட்டக் கும்பலைச் சேர்ந்த ஒருவருக்கும் வூல்மருக்



கும் இடையே கடும் வாக்குவாதம் நடந்துள்ளமை தற்போது உறுதியாகியுள்ளது.

அந்த சூதாட்டக்காரர் இந்தியாவைச் சேர்ந்தவர். எனினும், அவர் தாவூத் இப்ராகிமின் தம்பி அனீஸ் இப்ராகிமுடன் மேற்கிந்தியத் தீவுகளுக்கு வந்திருந்ததாகவும் இங்கிலாந்து பத்திரிகை ஒன்றின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்தக் கோணத்திலும் ஜமெய்க்கா பொலிஸார் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

இந்த விசாரணைகள் முடிவுற்று கொலையாளிகளைக் கண்டுபிடித்து கிரிக்கெட் விளையாட்டை சூதாட்டத்தில் இருந்து விடுவிக்க வேண்டும் என்பதே கிரிக்கெட் ரசிகர்களின் எதிர்பார்ப்பு. எனவே, அவையெல்லாம் ஜமெய்க்கா பொலிஸாரினதும் மேற்கிந்தியத் தீவுகளின் புலனாய்வு அதிகாரிகளினதும் கையில்தான் இருக்கிறது.

எவ்வாறாயினும் வூல்மரின் கொலை கிரிக்கெட் வரலாற்றில் ஒரு கறை படிந்த அத்தியாயத்தை உருவாக்கியிருக்கிறது.

### தடையின்றித் தொடரும் 'சுப்பர் -8'

இதனிடையே உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின் 'சுப்பர் 8' ஆட்டங்கள் தடைகள் ஏதும் இன்றி நடைபெற்றுவருகின்றன.

இலங்கை, ஆஸ்திரேலியா, அயர்லாந்து, நியூஸிலாந்து, பங்களாதேஷ், தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்து ஆகிய அணிகள் தற்போது 'சுப்பர் - 8' சுற்றுக்குள் நுழைந்திருக்கின்றன.

மிகவும் விறுவிறுப்பான முறையில் இந்தப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அறிமுக அணியான அயர்லாந்து அணி இம்முறை 'சுப்பர் - 8' சுற்றுக்குள் நுழைந்துள்ளமை அனைவரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியிருக்கிறது. அனுபவ அணிகளான இந்தியா, பாகிஸ்தான் வெளியேறியுள்ளன. ஆசியாவின் முக்கிய இரு அணிகள் வெளியேறிய காரணத்தால் சோபையிழந்த நிலையில் போட்டி தொடர்கிறது. இம்முறை உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது? என்ற எதிர்பார்ப்பு கிரிக்கெட் ரசிகர்கள் அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது.

அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு அவர்கள்தான் கிரிக்கெட் ராஜாக்கள். ★

# கூட்டுறவுத்துறையைப் 'பழுதுபார்த்து' நிமிரச் செய்வது காலத்தின் தேவை

கூட்டுறவு என்பது நாகரிக சமூகத்தின் பன்முகப் பண்புகளில் ஒரு முக்கிய கூறு. இது செவ்வையாக செயற்படுவதற்கு நமது பிரதேசத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் பணி ஆற்றிவந்துள்ளன.

கடந்த காலங்களில் இங்குள்ள இந்த அமைப்பு முறை முன்னாள் இந்திய ஜனாதிபதி வி.வி.கிரி போன்ற பெரியார்களாலும் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது.

பிற்காலத்தில் அந்த அமைப்பின் பணியும் புகழும் மழுங்கிப்போனமைக்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.

சில காலத்துக்கு முன்னர் , புதுக்கவிதை எழுதிய கவிஞர் ஒருவர் கூட்டுறவுச் சங்கக் கடைகளில் பணிபுரிபவர்களின் சிறப்பியல்புகளை வெளிப்படுத்துவதான கருத்து நிறைந்த ஒரு கவிதையைப் பின்வருமாறு வடித்திருந்தார்.

'அன்று சங்கக் கடையில்  
அவர் வெட்டியது கூப்பன் புள்ளி  
இன்று ஊரில் அவர்தான் பெரிய புள்ளி'

இந்த வரிகளில் இரண்டு கருத்துக்களை நாம் காணலாம்.

ஒரு காலத்தில் சங்கக் கடையில் கூப்பன் புள்ளி வெட்டிய சிற்றூழியர், தனது ஊழல் செயற்பாடுகளினால் மக்களுக்குரிய பொருள்களைச் சுரண்டியதனால் பெரும் தனவந்தராக - செல்வாக்குள்ள மனிதராக உயர்ந்துவிட்டார் என்பது ஒன்று.

இன்னொன்று சிற்றூழியராகப் பணிபுரிந்தவர் தனது மக்கள் பணியின் காரணமாக நேர்மையாகச் செயலாற்றியதன் வாயிலாக இன்று ஊரில் அவர் பெரிய மனிதராக சகலரும் மதிக்கும் நிலைக்கு உயர்ந்துவிட்டார் என்பதாகும்.

பொதுவில், ஊழல் மற்றும் பல குறைபாடுகள் மலிந்துவிட்டதனால் இன்று கூட்டுறவு அமைப்பின் மீது பொதுமக்களுக்கு வெவ்வேறு அனுபவங்கள் கருதி வெறுப்பு ஏற்பட்டு வருகின்றது என்பது மறைக்கமுடியாத உண்மை.

### நுகர்வோரை மதிக்கப் பழகவேண்டும்

பொதுமக்களை - நுகர்வோரை - ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை சில சங்கக் கடை நிர்வாகிகள். எதற்கெடுத்தாலும் எரிந்து விழுவதும் அலட்சியமாகப் பதில் சொல்வதும் அவர்களின் வாடிக்கையாகிவிட்டது. இவர்கள் எல்லாம் நுகர்வோரை எவ்வாறு கவனிப்பது என்ற வகையில் முறையாகப் பயிற்றுவிக்கப் படாதவர்கள் என்றே கூறவேண்டும். இவர்களே கூட்டுறவுத் துறைக்கு சாபக்கேடு

அதனால் கூட்டுறவின் தத்துவத்தையும் மக்கள் நலன் நாடிய கோட்பாட்டையும் குறைத்து மதிப்பிடமுடியாது; மதிப்பிடக்கூடாது.

நமது மூத்த தலைமுறையினர் இந்த அமைப்பினை முறையாக வளர்த்திருந்தமை இன்றைய இக்கட்டான நிலையிலும் மக்களுக்குபக்கத்துணையாக நின்று உதவியது என்று நாம் பெருமைப்பட்டுக் கொள்ளமுடியும்.

பெரியார் வீரசிங்கம் போன்றவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட கூட்டுறவு அமைப்பு இன்று பலராலும் குறைகூறப்படும் அளவுக்குத் தாழ்ந்தமைக்குக் காரணம் என்ன?

### மக்கள் துயர்துடைக்கப் பணி செய்கிறார்களா?

நாட்டில் அமைதியற்ற சூழ்நிலையை ஒரு காரணமாகக் கூறுவது பொருத்தமல்ல. நாட்டின் மீதும் மக்கள் மீதும் அக்கறை கொண்டவர்கள் இம்மாதிரி இக்கட்டான நிலைமைகளின்போதுதான் ஆர்த்தெழுந்து மக்கள் துயர் துடைக்கப் பணிசெய்வார்கள். ஆனால், எரியும் வீட்டில் பிடுங்கியது லாபம் என்றாற்போல கூட்டுறவு அமைப்புக்களில் புகுந்துகொள்ளும் சில பெருச்சாளிகள் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பயன்படுத்திப் பணமும் பவிசும் தேடிக்கொள்ள முயல்வது துரதிஷ்டமாகும்.

எதுவானாலும், வடக்கில் கடந்த ஓகஸ்ட் மாதத்திற்குப் பிறகு திடீரென ஏற்பட்ட அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாட்டை அடுத்து உள்ளூர் வணிகர்களில் சிலர் தம்மிடமிருந்த பொருள்களின் விலைகளைப் பன்மடங்கு உயர்த்தியும் நடைபாதைக் கடைகளுக்கு அவைகளை நகர்த்தி பொதுக் கடைகளில் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியும் பொதுமக்களைத் திக்குமுக்காடச் செய்த வேளையில் -

அரச அதிகாரிகள் கப்பல் மூலம் அத்தியாவசியப் பொருள்களைத் தருவித்தபோது, அவைகளைப் பொதுமக்களுக்கு முறையாகப் பங்கிட்டு வழங்குவதற்கு இந்த கூட்டுறவுச் சங்கக் கடைகளே உறுதுணையாக இருந்துள்ளன; கை கொடுத்து உதவின.

கூட்டுறவுச் சங்கங்களும், அவற்றின் சங்கக்கடைகளும் இல்லாதிருந்திருப்பின் இன்றைய காலச் சூழ்நிலையில் சீரான, ஒழுங்கு முறையான விநியோகத்தை அரச அதிகாரிகளால் செய்திருக்க முடியாது. எவ்வளவுதான் கையாடல்களும், தில்லுமுல்லுகளும் இருந்தாலுங் கூட எமது பிரதேசத்தின் வரப்பிரசாதமாக - பாரம்பரிய நடைமுறையாக வளர்ச்சியுற்றுள்ள கூட்டுறவுத்துறை என்றும் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று. அதில் காணப்படக் கூடிய நிறை குறைகளை ஆராய்ந்து சீர்செய்து கொள்வது அவசியமாகின்றது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் இயக்கம் இல்லையெனில், கொழும்பு அரசாங்கம் போடும் கட்டளைகளைத் தலைமேல் சுமந்து, பணிபுரியும் அரச அதிகாரிகள், புதிய வழிதேடித் தடுமாற நேர்ந்திருக்கும். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் என்ற வழிவாய்க்கால் இல்லாதிருந்திருப்பின் அரச அதிகாரிகளின் விநியோக பலம் 'நாறி' இருக்கும்!

மக்கள் சேவைக்கென்றே - மக்கள் தமக்குள்தாமே உதவிக்கொள்வதற்கென்றே - ஆழ்ந்த சிந்தனையுடன் பெரியோர்களால் உருவாக்கப்பட்டதே இந்தக் கூட்டுறவு அமைப்பு. கடந்த காலங்களில் அது மக்கள் மத்தியில் புரிந்துள்ள பணிகளைக் குறைத்து மதிப்பிட முடியாது. அந்த அமைப்பின் வழிவந்த கூட்டுறவு சங்கக்

**அச்சுதன்**

கடைகள் இங்கே செயற்பட்டுவந்தமையினாலேயே திடீரென ஏற்பட்ட அத்தியாவசியப் பொருள் தட்டுப்பாட்டின் காரணமாக உருவாகவிருந்த பட்டினி பஞ்சத்தை அதிகாரிகளால் முண்டியடித்து விரட்டியடிக்க முடிந்தது. கொண்டுவரப்பட்ட பொருள்களை முடிந்தவரை மக்களுக்குப் பகிர்ந்தளித்து நிலைமையைச் சமாளிக்க முடிந்தது.

ஒரு காலத்தில் கூட்டுறவுத்துறை பொன் முட்டையிடும் வாத்துபோல், நம் பிரதேசத்தின் மூலை முடுக்கெல்லாம் உற்பத்திச் சாலைகளையும், கைத்தொழில் நிலையங்களையும் ஏற்படுத்தி வேலையற்றிருந்த அனேகருக்குத் தொழில் வழங்கும் நிறுவனமாக விளங்கியது. தரமான துணி வகைகளையும், உணவுப் பொருள்களையும், வேறு கைவினைப் பொருள்களையும் உற்பத்திசெய்து வீறுநடைபயின்றது.

இடைக்காலத்தில் இந்நிலை சீரழிந்து போனமை கவலைக்குரியது. அரசியல் லாபம் என்ற ஊடுருவல்காரனால் உண்டான மயக்கம் அது.

இன்றும் கூட, கூட்டுறவுத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்க்கைநிலை, வருமான வரம்பு போன்ற அம்சங்கள் எந்தளவு பாராட்டக் கூடியதாய் இருக்கிறது என்பது ஆய்வுக்குரியது.

கூட்டுறவுத்துறை தேய்ந்து போனமை, அதில் பணிபுரிவோரின் தொழில்வருமானப் பற்றக்குறை என்பனவும் பல இடங்களில் சீர்கேடுகள் மலிவதற்குக் காரணமாகும். இதனைக் களைந்தெறிய வேண்டியது அவசியம்.

### நோயாளர்களுக்கு நேர்ந்த நிலை

கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட அத்தியாவசியப் பொருள்களைச் சீராகவும் சிறப்பாகவும் மக்களுக்கு விநியோகிக்க அரச அதிகாரிகள் ஈடுபட்டிருந்தவேளை யில், அவை சரியாக மக்களுக்குப்போய்ச் சேர்வதில் எத்தனையோ இடைஞ்சல்கள் ஏற்பட்டன என்பது மக்களுக்கு குறைபாடாக இருந்தது.

## மக்கள் மன்றம்

நோயாளர் ஒருவர் தனக்கு வேண்டிய ஒரு உணவுப் பொருளை தான் சார்ந்துள்ள சங்கக் கடையிலிருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை இருக்குமானால், அதற்கு என்ன காரணம்? நோயாளி தனது 'கிளினிக்' கொப்பியுடன் கிராமசேவகரிடம் சென்று ஒரு கடிதம் எழுதி அதில் அவரின் சிபார்சு பெற்றுக்கொண்டு பிரதேச செயலரிடம் சென்று அவருடையகையெழுத்தையும் பெற்றுக்கொண்டு சங்கக் கடைக்கு வரவேண்டும். சங்கக் கடையில் அப்பொருள் கிடைக்குமானால் பெரிய காரியம். பெரும்பாலும் நோயாளி கடைக்கும் போகும் போது அப்பொருள் முடிந்துவிட்டதாகவே பதில் கிடைக்கும்.

இந்த நிலைமைக்குக் காரணம் என்ன? எங்கோ எதிலோ குறைபாடு இருக்கிறது. இது போன்ற பொதுமக்கள் நலனுக்கு பாதகமான விடயங்களை ஆராய்ந்து, அறிந்து கூட்டுறவுத் துறையைத் தூய்மைப்படுத்துவது அவசியம்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இக்கட்டுகளின்போது உணவுப்பொருள்கள் மக்களுக்கு சீராகக் கிடைக்கச் செய்வதற்கு இத் துறையைத் 'பழுதுபார்த்து' நிமிர்த்த வேண்டிய பொறுப்பு அத் தறை சம்பந்தப்பட்ட முக்கியஸ்தர்களின் கடமையல்லவா?

அதற்கு மக்களின் ஆதரவும், அரச அதிகாரிகளின் ஒத்துழைப்பும் அவசியம். நெருக்கடியான காலங்களில் மட்டுமன்றி, சாதாரண - இயல்பு வாழ்க்கை சீராக உள்ள - காலங்களிலும் கூட்டுறவுச் சேவையை மக்கள் நாடித் தமது தேவைகளை நிறைவேற்றும் மனப்போக்கு அதற்கு அவசியம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சதாபொன்ஸ் கல்வி சமூக மேம்பாட்டு நிதியம்
### அங்குரார்ப்பண வைபவம்

இடம் :- சதாபொன்ஸ் கல்வி நிலையம்
காலம் :- நாளை (02.04.2007) திங்கட்கிழமை
நேரம் : பி.ப. 2.30 மணி
மங்கல விளக்கேற்றல்
தேவாரம்
தமிழ்த்தாய் வாழ்த்து
வரவேற்புரை:- திரு.க.கிருஷ்ணகுமார் [உப செயலாளர், சதாபொன்ஸ் கல்வி சமூக மேம்பாட்டு நிதியம்]
ஆசியுரை:- சுவாமி சித்குருபானந்தா [சாரதா சேவாச்சிரமம் - பருத்தித்துறை]
பிரம்மஸ்ரீ சபா.தேவராஜக்குருக்கள் [பிரதமகுரு - மாலிசந்திப்பிள்ளையார் கோவில்]
தலைமையுரை:- திரு.ச.கைலாசபதி [உப தலைவர், சதாபொன்ஸ் கல்வி சமூக மேம்பாட்டு நிதியம்]
ஞாபகார்த்த உரை:- திரு.ச.விநாயகமூர்த்தி [ஓய்வுபெற்ற ஆசிரியர்]
பிரதம விருந்தினர் உரை:- திரு.சி.சத்தியசீலன் [பிரதேச செயலர், காவெட்டி]
கௌரவ விருந்தினர்கள் உரை:- திரு.வ.செல்வராசா [வலயக் கல்விப் பணிப்பாளர் - வடமராட்சி]
திரு.க.அம்பலவாணர் [கோட்டக் கல்வி அதிகாரி - காவெட்டி]
சிறப்பு விருந்தினர் உரை: திரு.செ.சேதுராஜா [அதிபர், யா/நெல்லியடி ம.ம.வி.]
நன்றியுரை:- திரு.கி.சண்முகநாதன் [சதாபொன்ஸ் கல்வி சமூக மேம்பாட்டு நிதியம்]
42 வசதிகுறைந்த மாணவர்களுக்கு நிதிய உதவி வழங்கப்படும்.
மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இயக்குநர் சபை,
சதாபொன்ஸ் கல்வி சமூக மேம்பாட்டு நிதியம்.
(சி/48847)

## மாடி வீடு வாடகைக்கு

நல்லூர், சங்கிலியன் வீதியை அண்மித்த இல.14, அரச வீதியில் உள்ள மாடி வீடு சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மிகவும் உகந்தது.
தொடர்புகொள்க: 0776137364
இரவில் மட்டும்: 222 5860

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977ஆம் ஆண்டு திருவோண நட்சத்திரத்தை உடைய கனடாவை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட தாரம் இழந்தவருக்கு மணமகள் தேவை.
தொடர்பு:- விள.இல. 2958, மே.பா. உதயன்.

## குருக்கள் தேவை

இணுவிலில் உள்ள பிரதான ஆலயம் ஒன்றிற்கு நித்திய, நைமித்திய பூஜைகளுக்கு ஒரு குருக்கள் தேவை. தகுதியானவர்கள் 10.04.2007 இற்கு முன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:- ம.சுயம்புலிங்கம்,
சிவன் கோவிலடி,
கே.கே.எஸ். வீதி,
இணுவில்.
(59211)

## ஸ்கொட் கணனி நிறுவனத் திறப்புவிழா

அமரர் அருணாசலம் மகாதேவன் (இலங்கை மின்சார சபை ஊழியர்) அவர்களின் 10 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு தென்மராட்சி நகரப் பகுதியில் அமைந்துள்ள தபாற்கந்தோர் வீதி, கற்குழி, முதலாம் ஒழுங்கையில் யாழ். நகர முன்னணி ஆசிரியர்களும், மென்பொருள் வடிவமைப்பாளர்களும் இணைந்து ஆரம்பிக்கும் கணனி பயிற்சி நிலையமும், கணனி சார்ந்த சேவை நிலையமும் நாளை [02.04.2007] திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

(59167) இயக்குநர், ஊழியர்கள்.

## யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
### பழைய மாணவர் சங்கம்
### வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2007

தலைவர் : திருமதி சி.அனந்தசயனன் (அதிபர்)
இடம் : கல்லூரி மண்டபம்
காலம் : 15.04.2007 ஞாயிறு மு.ப. 10.00 மணி
அனைத்து உறுப்பினர்களும் நடப்பு ஆண்டிற்கான சந்தாப்பணத்தைச் செலுத்தி அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்வதுடன் தவறாது சமுகம் தரவும்.
பிரேரணைகள் இருப்பின் 06.04.2007 இற்கு முன் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.

சி.அனந்தசயனன்
தலைவர்.
(59207)
சி.தேவகுமாரன், செ.சிவபாலன்
இணைச் செயலாளர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



அன்புடையீர்,
நிகழும் விய வருடம் மாசி மாதம் 13ஆம்நாள் (25.02.2007) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி
அமரர்
**சுப்பிரமணியம் அன்னபூரணம்**
அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (01.04.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

நாமகள் லேன்,
கோக்குவில் கிழக்கு,
கோக்குவில்.
(59171)
மக்கள், மருமக்கள், பேரமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
செ.யோகேந்திரராசா, யோ.செல்வேஸ்வரி.

## கொக்குவில் இந்துக் கல்லூரி
### பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
### வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம் :- 06.04.2006 வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணி.
இடம் :- பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்
தலைவர் :- திரு.பொ.கமலநாதன் (அதிபர்)
பெற்றோர், ஆசிரியர்கள் தவறாது சமுகம் தரும்படி அழைக்கப்படுகின்றீர்கள்.

பொ.கமலநாதன்
அதிபர்.
(சி/48846)
செ.செல்வகுமாரன்
செயலாளர்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### இலங்கை
### காணி வழங்குவோரிடமிருந்து விலை மனுக்கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான வளாகத்திலிருந்து இரண்டு கிலோமீற்றர் சுற்றாடலுக்குள் இருபத்தைந்து பரப்பிற்குக் குறையாத காணியை வழங்கக்கூடியவர்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்படுகின்றன. ஒருவருக்கு மேற்பட்டவர்களின் உடைமையாகவுள்ள காணிகளை இணைத்து வழங்கக்கூடிய வகையிலான விலை மனுக்களும் சமர்ப்பிக்கலாம். மனுக்களைச் சமர்ப்பிக்க விரும்புவோர் காணியின் மொத்தப்பரப்பு, பரப்பு ஒன்றின் விலை, காணி அமைவிட முகவரி, விலை மனு சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு 20.04.2007ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'காணி வழங்கல்' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

பதிவாளர்
30.03.2007
(சி/50900)

## MAHARAJ TOURS
### VAN FOR HIRE



யாழ். நகரில் உள்ளூர்
சேவைகளுக்கான கட்டணம் தற்பொழுது
01) 60 Km இற்கு குறைவாயின் (≤60Km)
1 Km = 30/- அத்துடன் 1 நாள் கட்டணமாக 300.00 அறிவிடப்படும்
02) 60 Km இற்கு கூட (>60 Km)
1 Km = Rs. 30
நாள் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
உடன் அழையுங்கள்:
(59101) 0773 114803, 0777 448411

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மாணிக்கம் இராசதுரை



திருமதி மாணிக்கம் இராசதுரை 25.03.2007 லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் யாழ். நல்லூர் (இலக்கம் 12) அரச வீதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, கொட்டாஞ்சேனை, ஜினானந்த மாவத்தையை வதிவிடமாகவும் கொண்டவர்.
இவரது இறுதிக்கிரியைகள் லண்டனில் இன்று (01.04.2007) நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56, அரச வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 7427 (59157)
தகவல்:
Dr. T. கனகலிங்கம் குடும்பம்.


### கணபதிப்பிள்ளை செல்வரெத்தினம்



புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய கணபதிப்பிள்ளை செல்வரத்தினம் 30.03.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சற்குணத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அமிர்தலிங்கம், நவரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மனோன்மணி, விஸ்வலிங்கம், காலஞ்சென்ற சுந்தரம், கிருஷ்ணபிள்ளை, மகாலெட்சுமி, நவரெத்தினசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் மகேந்திரன், மனோராணி, தர்மகுலராணி, புனிதவதி, புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தரூபி, முத்துலிங்கம், லோகநாதன், சிவகுமார், சண்முகலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனும் சந்துரு, சரண்யா, விஜயன், விஜி, வினோ, வினோத், நிஷா, ஆஷா, ஜனகன், கோகுலராணி, தட்சாயினி, ஜனார்த்தனன், ஹரிகரன், லோஜிகா, ஸ்தெபனி, தர்சிகன், சிந்தியா, திவானா, ஸ்ரீனா, ரிஷானா ஆகியோரின் அன்புப் பேரனும் அபி, அனு, தருண், சஞ்சய் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2007) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில். (59210) தகவல்: மக்கள், மருமக்கள்.

### கந்தையா இராமலிங்கம் (ஆசாரி)



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராமலிங்கம் (29.03.2007) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் பார்த்திபன், ஜெயவதனி, தேவராஜன், புவனேஸ்வரி, திபாகரன் (அமரர்), மோகனாஸ் (கண்ணன்), ரூபன், நிஷாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அருள்குமார் (கொழும்பு), பேரின்பநாயகி, பிரியலோகினி, ஜோதிலட்சுமி, சிவானந்தம், இராசமயில் (அமரர்) ஆகியோரின் அன்பு மாமனும் கேஷன், மாதுரி, தாட்ஷாயினி, இஷாஜினி, கௌசிகன், லோகிதா, மதிநிலவன், மதுசுதன், மதுமிதா, சுரேந்திரன், சந்திஜா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04 2007) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

53, கேசாவில் பிள்ளையார் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(59216)
தகவல்: மனைவி.
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### S.J. செல்லத்துரை



(தலைமைக் கிராம உத்தியோகத்தர் (அதி விசேட தரம்), பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மாட்டின் வீதியைப் பிறப்பிடமாகவும், யாழ். சுண்டுக்குளி, இல. 45, றக்காலேன் எனும் முகவரியை வதிவிடமாகவும் கொண்ட S.J.செல்லத்துரை அவர்கள் 29.03.2007 வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் அமரர் கந்தையா செல்லத்துரை (முன்னாள் அரசாங்க சேவை, பொதுச்சேவைத் தொழிலாளர் சங்கத் தலைவர்) - திருமதி டெய்சி செல்லத்துரை ஆகியோரின் அன்பு மகனும் திருமதி செ.மங்களேஸ்வரி (மாலா - அரச முகாமைத்துவ உதவியாளர், வலயக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம், முன்னாள் யாழ். மாநகரசபை உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு கணவரும் பவித்திரா (கனடா), தாரகா (இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை), சாகித்தியா (மாணவி - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஹரித்திரா (மாணவன் - சம்பத்தரிசியார் கல்லூரி, யாழ்.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கணேசபாலன், ரஜனி, மகேந்திரா, நாளினி, சுரேன், ராஜன், தர்ஷினி, லோஜினி, ரவி, கெனா, சனா, ரூபினி ஆகியோரின் பேரன்புச் சகோதரனும் திருமதி ரோஜினி மகேந்திரா அவர்களின் அன்பு மைத்துனரும் மிதுன்ராஜ், பிரிதிவிராஜ் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2007) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.45, றக்கா லேன்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(59208)
தகவல்: திருமதி செ.மங்[illegible] ([illegible]),
செ.மகேந்திரன் (சகோதரன்).

## The Royal College of Jaffna

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில மற்றும் ஆங்கில இலக்கணம் 4 ஆவது பிரிவு ஆரம்பம் [வகுப்பில் 20 மாணவர்கள் மட்டும்]
By. ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, பிளாக் வீதி, சங்கானை.
'The Royal is The Best'

## மணப்பெண்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த குற்றமுள்ள 1971 சதயம் 51 பாவம், 1973 திருவோணம் 25 பாவம், 1975 விசாகம் 79 பாவம், 1975 பூரம் 43 பாவம், குற்றமற்ற 1963ஆம் ஆண்டு கார்த்திகை 7 பாவம், 1975 உத்தராடம் 28பாவம் உள்ள பட்டதாரி அரச உத்தியோகமுள்ள மணமகன்களுக்கு அரச உத்தியோகமுள்ள மணப் [illegible]
[illegible]
இல: 2959, மே/பா
உதயன், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விய வருடம் பங்குனிமாதம் 18 ஆம் நாள் இன்று (01.04.2007) ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி 52 நிமிடம் தொடக்கம் 10 மணி 43 நிமிடம் வரையுள்ள உத்தர நட்சத்திரம் இடபலக்கினம், அமிர்தசித்த யோகம் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

திரு.திருமதி சிவலிங்கம் தம்பதியரின் புத்திரன் திருவளர்
செல்வன் **சிவஅன்பு**
(உரிமையாளர், சிவலிங்கம் ரான்ஸ்போட்)
அவர்களுக்கும்



திரு.திருமதி ஞானேஸ்வரன் தம்பதியரின் புத்திரி திருவளர்
செல்வி
**சர்மிலா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு ஸ்ரீ வெங்கடேஸ்வர வரதராஜப் பெருமான் தேவஸ்தான ஸ்ரீ லட்சுமி நாராயண திருமண மண்டபத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மண மக்களை ஆசீர்வதித்துத் தொடர்ந்து இடம்பெறும் மதிய விருந்துபசாரத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவைநாடும்

திரு.திருமதி க.சிவலிங்கம் இராசலட்சுமி குடும்பம்,
(சிவலிங்கம் மோட்டோர்ஸ் அன் ரான்ஸ்போட்),
77, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 2223212.

திரு.திருமதி ஞானேஸ்வரன்
சொர்ணலட்சுமி குடும்பம்,
79, செட்டித்தெரு, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு) (59221)

## புலனாய்வுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கவுக்கும் கூட்டமைப்பு நாடாளுமன்றக்குழுத் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் தகவல் கொடுத்தார். அதன் பின்னர் அவர் விசாரணைக்குச் சமுகமளித்தார்.

மீண்டும் எதிர்வரும் 3ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்குச் சமுகமளிக்கும்படி அவர் கேட்கப்பட்டுள்ளார். (அ-1)

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**வியாழனன்று நடந்த ஆணைக்குழுக் கூட்டம்**

அமைச்சருடன் தொடர்பு கொண்டு எடுத்த முயற்சியின் பயனாக, கடந்த வியாழக்கிழமை ஆணைக்குழுவின் கூட்டம் நடைபெற்றது.

உயர்கல்வி அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால தலைமையில் நடந்த அந்தக் கூட்டத்திற்கு, ஆணைக்குழுவின் உறுப்பினர்களான பேராசிரியர் எம். நாணயக்கார, பேராசிரியர் கே.சிற்றம்பலம் ஆகியோர் சமுகமளிக்கவில்லை.

மாணவர்களின் பாதிப்புக் குறித்து விளக்கமளித்து அவர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தேன்; விளக்கினேன்.

''குடாநாட்டின் சனத்தொகைக்கு ஏற்ப 1994-1995 கல்வி ஆண்டில் அனுமதி வழங்கப்பட்ட மாவட்டக் கோட்டாவின் பிரகாரமே இம்முறையும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதில் மாற்றம் செய்ய இயலாது'' என்று ஆணைக்குழுவினர் தெரிவித்தனர்- என்று பிரதி அமைச்சர் கூறினார். (அ-1)

## புதுவருடத்துக்காக..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.நகரில் உள்ளதனியார் புடைவை வர்த்தகர்கள் கடந்த ஓகஸ்ட் மாதத்துக்குப் பின்னர் இப்போதே முதல் தடைவையாக புடைவை வகைகளைத் தருவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-1)

## மூதூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலர்கள், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள், பொலீஸார், படையினர் சகிதம் பிரதிநிதிகள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

★ மீளக்குடியமர்ந்த பின்னர் சுற்றி வளைப்புத் தேடுதல்கள் இடம்பெறமாட்டாது என்று உறுதிமொழி வழங்கவேண்டும்.

★ சேதமடைந்துள்ள வீடுகள், பாட சாலைகள் புனரமைக்கப்பட்ட பின்னரே மீளக்குடியமரமுடியும்.

- என்று இடம்பெயர்ந்தவர்களின் பிரதி நிதிகள் முன்நிபந்தனைகளை, கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே மீளக்குடியமரமுடியும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்கள் மூலம் வீடுகளையும் பாடசாலைகளையும் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது. (அ-1-151)

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியர் சிறிசெல்வம்
அவர்களது அன்புத் தந்தை
**ஆறுமுகம் தம்பிராசா**
அவர்கள் 30.03.2007 அன்று காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்
யா/வேலணை மத்திய கல்லூரி.
(59213)

## களுவாஞ்சிக்குடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுப் பிற்பகல் 4.10 மணியளவில் அதிரடிப்படையினர் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் காயமடைந்தவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1-4)

## தந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையாளர்களான சி.வி.கே.சிவஞானம், கலாநிதி க.குணராசா, ஆகியோர் உட்படப்பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு மலர் அஞ்சலி செலுத்தினார்கள். (அ-8)

# கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் ஆரம்பகால உறுப்பினரும்
அம்பாளின் தொண்டனுமாகிய
**செல்லர் பொன்னையா**



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது சபையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா அம்பாளின் திருப்பாதங்களில் சாந்தி அடையப்பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!
(59217)
கொக்குவில் நந்தாவில் கற்புலத்து
மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபையினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகராசா நல்லம்மா



கோப்பாய் மத்தியைச் சேர்ந்த நாகராசா நல்லம்மா நேற்று (31.03.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகராசாவின் அன்பு மனைவியும் ஜீவரத்தினம், தர்மலிங்கம் (தறுமு), கமலாதேவி, காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், அன்னலிங்கம் மற்றும் கணேசலிங்கம் (கணேஸ்), லீலாவதி (பட்டு), விக்ரோறியா (பழம்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற கந்தசாமி, மரியகொற்றி (தீபம்), சுப்பிரமணியம், ராணி, பரிமளம், தவராணி, வின்சன், மனோகரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02.04.2007) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து புனித சூசையப்பர் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆராதனையைத் தொடர்ந்து புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சூசையப்பர் கோயிலடி,*
*கோப்பாய் மத்தி, கோப்பாய்.* (59219)

*தகவல்:*
பிள்ளைகள்,
மருமக்கள்.

## நாகவேல்ராசா டயானி

(மாணவி, தரம் - 8, கொக்குவில் இந்துக் கல்லூரி)



இணுவில்கிழக்கு, வங்கியடியைச் சேர்ந்த செல்வி நாகவேல்ராசா டயானி நேற்று (31.03.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நாகவேல்ராசா - வியவர்த்தனி தம்பதியரின் அன்புப் புதல்வியும் நவநீபன் (மாணவன், யாழ்.இந்துக் கல்லூரி), நவலக்சன் (மாணவன், யா/இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் இராசையா, அன்னலட்சுமி, காலஞ்சென்ற நடராசா மற்றும் கமலாம்பிகை ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் நாகவேல்சந்திரன், அருள்வேல்சந்திரன், பத்மவேல், ஸ்ரீவேல், சிவன்சோதி, சரஸ்வதி, தேவி ஆகியோரின் பெறாமகளும் நாகவேல்நாயகி, இரதிவேல்நாயகி, ஜெயலக்சுமி, மகேஸ்வரன், செந்தில்குமரன் ஆகியோரின் மருமகளும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2007)ஞாயிற்றுக் கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வங்கியடிலேன்,*
*இணுவில் கிழக்கு.* (59223)

*தகவல்:*
இ.நாகவேல்ராசா (தந்தை).

## மோசஸ் ஜோன் பொஸ்கோ

மோசஸ் ஜோன் பொஸ்கோ அவர்கள் காலமானார்.

அன்னார் மேரி றெஜினாலின் கணவரும் மேரிவிக்டோரியா, இருதயநாதன் (லண்டன்), யோகநாதன் (தாழையடி), ஜெகநாதன் (தாழையடி), உலகநாதன் (லண்டன்), அருமைநாதன் (லண்டன்), அருட்சகோதரி ஜோன் எல்சி (திருக்குடும்ப கன்னியர் மடம் - திருகோணமலை), மேரி மாகிரேட் (தாழையடி), ஜோதிநாதன் (தாழையடி), தமிழ்செல்வி (தாழையடி), காலஞ்சென்றவர்களான விடுதலை, ஜீவனாதன் ஆகியோரின் தந்தையும் டொன் பொஸ்கோ, மரியஜெனோவா, சிவகௌரி, எல்சி, டல்சினி ஆகியோரின் மாமனும் துஷ்யந்தி, விஜயந்தி, மேஷலூர்ட்ஸ், ஜொன்கென்னடி, ஜோன்கெல்வின், ஜோன்கெலின், துஷாரா, டொனிஸ்டன், வைஷாலினி, ஜெபோதினி, ஜோன் ஜேர்சன், ஜோன் டார்லின் ஆகியோரின் பாட்டனும் லோறட் (வவுனியா), தெரேசம்மா (கனடா), பிலோமினா (நோர்வே), சூசைப்பிள்ளை (தாழையடி), மரியம்மா (நோர்வே), மரியதாஸ் (பிரான்ஸ்) ஆகி யோரின் சகோதரனும் அன்னமேரி, வேதநாயகம், கிறிஸ்து ராஜா, ராணி, லடிஸ்லாஸ், மேரி ரோஸ் மெடிடா ஆகி யோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிச்சடங்கு நாளை (02.04.2007) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தாழையடியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொ.பே.:*
*[44] 793-267-5859.* (சி-48855)

*தகவல்:-*
இருதயநாதன்
(மகன் - லண்டன்).

## எதிர்பார்க்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தரங்கமான முறையில் ஆராயும் விசேட கூட்டத்திற்குக் கூட பெரும்பாலான உறுப்பினர்கள் சமுகமளிக்காமல் தவிர்த்துக் கொண்டனர்.

சூடான் அரசாங்கத்தின் படுபயங்கரமான மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக மெல்லத் தட்டும் வகையிலான குறிப்பு ஒன்றை மட்டுமே ஐ.நா. மனித உரிமைகள் சபை முன்வைத்துள்ளது.

இவை குறித்து ஐ.நா.மனித உரிமை அமைப்பு (யு.என்.வாச்) மிகுந்த அதிருப்தி தெரிவித்துள்ளது.

உலகின் பல பாகங்களில் இருந்தும்- பல நாடுகளிலிருந்தும்- நடைபெறும் பல வகையான மனித உரிமை மீறல்கள் குறித்து உரிய நடவடிக்கைகள் எதனையும் தெரிவிக்காமலேயே ஐ.நா.மனித உரிமைகள் சபையின் நான்காவது கூட்டத் தொடர் முடிவடைந்ததாக யு.என்.வாச் தனது ஏமாற்றத்தை வெளிப்படுத்தி உள்ளது. (அ)

## பயங்கரவாதத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரைவில் வகுத்துச் செயற்படவேண்டும் என்று அந்நாட்டின் வெளியுறவுச் செயலாளர் வலியுறுத்தினார்.

இது சம்பந்தமான கலந்தாலோசனை இன்று நடைபெறும் நிலையியல் கூட்டத்தில் தொடர்ந்தும் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் சார்க் உச்சி மாநாட்டிலும் பயங்கரவாதத்தை ஒழிப்பது சம்பந்தமான விடயம் பிரதான இடம் பிடிக்கும் என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளையில்-

கொழும்பில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் -

சார்க் உச்சி மாநாட்டில் பயங்கரவாதத்துக்கு எதிராக ஏற்கனவே வகுக்கப்பட்ட மேற்படி அமைப்பின் வழிமுறைகளைக் கவனத்தில் எடுத்து மீள ஆராயவேண்டும் என்றும் இலங்கை கேட்க இருப்பதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் றோகித போகொல்லாகம கூறியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் சில நாள்களுக்கு முன்னர் நடைபெற்ற வெளிநாட்டுச் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அமைச்சர்போகொல்லாகம, தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய வான்தாக்குதல் குறித்து நீண்ட நேரம் பிரஸ்தாபித்துக் கருத்துகள் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் இந்தத் தாக்குதல் கிளை விட்டுப் பரவலாம் என்றும் பிராந்திய நாடுகள் கவனத்தில் கொள்ளவேண்டும் என்றும் எச்சரித்தார்.

ஆகையால் பிராந்திய நாடுகள் கட்டுநாயக்காவில் நடத்தப்பட்ட வான் தாக்குதல்கள் போன்று தங்கள் நாடுகளில் நடை பெறும் வரை காத்திருக்கக் கூடாது. விடுதலைப் புலிகள் இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் தாக்குதல்களை நடத்தினார்கள் என்று அறியப்பட்டவர்கள். கூலிப் படைகளாகச் சென்றுகூட அவர்கள் இந்தப் பிராந்தியத்தில் உள்ள கேந்திர நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தக்கூடும் - என்றும் அமைச்சர் போகொல்லாகம அப்போது தெரிவித்தார். (அ)


**உடன் விற்பனைக்கு**

விரிவுரையாளரின் தனிப் பாவனையில் உள்ள NPMB - XXXX இலக்கமுடைய CBZ (Star - Silver Colour) 6000km ஓடியது. உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0773248875, 021 2228362


# கண்ணீர் அஞ்சலி



29.03.2007 அன்று
காலமான
எமது ஆருயிர் நண்பன்
**எஸ். ஜே.செல்லத்துரை**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செல்வா ஹாட்வெயர்,
நியூட்டா இன்டஸ்றீஸ்,
120, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளரும்
ஊழியர்களும்.

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம்பிள்ளை தனபாலசிங்கம்

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம்பிள்ளை தனபாலசிங்கம் 29.03.2007 வியாழக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் தவமணியின் (கனடா) அன்புக்கணவரும் காலஞ்சென்ற நாகலிங்கம்பிள்ளை - பவளம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற இராசையா - இராசம்மா தம்பதியரின் மருமகனும் சிவபாலன் (Siva Electronics - Abans Service, Vavuniya) காலஞ்சென்ற ஷகிலா (கனடா) மற்றும் சிவானந் ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற ரமணி, சிவகுமார் (கனடா), நகுலேஸ்வரி, றாஜி ஆகியோரின் மாமனும் பேரின்பநாயகம் (CKP), மனோன் மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரிகா (கனடா), வைஷ்ணவி, விஷ்ணுகா, றதுஷன் (வவுனியா), தாரணி, தர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் நடராசா, காலஞ்சென்ற அன்புமலர் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2007) ஞாயிற்றுக் கிழமை மு.ப.10மணிக்கு வவுனியாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடையார் லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*
*தொ.பே.:-024 4920305.* (59218)

தகவல்:
ந.பேரின்பநாயகம் (CKP) (சகோதரன்),
ந.ஐங்கரன் (மருமகன்).

## ஐயாத்தம்பி சின்னம்மா

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்தம்பி சின்னம்மா 31.03.2007 சனிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்தம்பியின் அன்பு மனைவியும் இராஜேஸ்வரியின் தாயும் தனபாலசிங்கத்தின் மாமியும் ரோகினி (கனடா), முகிந்தன்(சுவிஸ்), பாமினி(கனடா), ராகுலன்(கனடா), பாலினி(லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2007) மு.ப. 10மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

*மீசாலை மேற்கு.* (59225)

**தகவல்:**
ப.பத்மநாதன் *(நாதன்- மருமகன்).*

## ஆறுமுகம் தம்பிராசா



(புகையிலை வியாபாரி, அம்பலாங்கொடை-
(சரவணை கிழக்கு, மயிலப்புலம் வேலணை)

வேலணையைப் பிறப்பிடமாகவும் தற்போது இல.25, மாரியம்மன் வீதி. திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தம்பிராசா 30.03.2007 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம்-மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற விநாசித்தம்பி-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் திருமதி பத்மா முருகதாஸ் (ஆசிரியை யா/மானி.மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ணா வித்தி 2007இல்), திருச்செல்வம்(சுவிஸ்), நந்தகுமார்(சுவிஸ்), காலஞ்சென்ற சிறிகாந்தன் மற்றும் திருமதி கௌசலாதேவி சந்தரலிங்கம், சிறிசெல்வம்(ஆசிரியர், யா/வேலணை மத்திய கல்லூரி)ஆகியோரின் பாசமிகு தந்தையும் கோ.முருகதாஸ்(சாரங்கா நகை மாடம்), பாமினி(சுவிஸ்), ரூபினி(சுவிஸ்), சந்தரலிங்கம்(சிவா பிறதர்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்ற நாகபிள்ளை மற்றும் செல்லம்மா காலஞ்சென்ற ராசம்மா மற்றும் மகாலிங்கம் (வவுனியா) ஆகியோரின் அன்பு சகோதரரும் அன்னம்மா, தம்பு, இராசம்மா ஆகியோரின் மைத்துனரும் துளசி, தனுஜா, கஜானன், நிதுஜன், ஆருதி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2007)ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப10மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.25, மாரியம்மன் வீதி,*
*திருநெல்வேலி.* (59215)

*தகவல்:*
குடும்பத்தினர்.

**மிதிவெடி விழிப்புணர்விற்கும் பங்களிப்புக்குமான சர்வதேச தினம் - ஏப்ரல் 04**
சர்வோதயம் யுனிசெவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.04.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.